# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 82 ஆம் இலக்க,
# வான்படை (திருத்தச்) சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1988, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 — தபாற் செலவு : சதம் 75

# 1988 ஆம் ஆண்டின் 82 ஆம் இலக்க, வான்படை (திருத்தச்) சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 39/87

## வான்படைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 82 ஆம் இலக்க, வான்படை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வான்படைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :— 359 ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) கோப்பரல் ஒருவர் தவிர்ந்த ஆணைபெருத ஓர் அலுவலர் இச் சட்டத்தில் தரப்பட்டுள்ள ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சார்த்தப்படுமிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தீர்ப்பு மீதான தண்டனைத் தீர்ப்பு சம்பளத்தைப் பறிமுதல் செய்வதை உள்ளடக்குமாயின் அல்லது முனைஞர் அலுவலர் ஒருவர் அதன் சார்பில் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதியின்மூலம் விதிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதான சிறிய தண்டனையொன்றைமட்டும் கொண்டிராததாயின், அவரது முனைஞர் அலுவலர் ஆனவர், குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் அவர் சுருக்கமுறை விசாரணை செய்யப்படுவதனையா அல்லது சேனை அதிகாரமன்று மூலமாக விளங்கப்படுவதனையா விரும்புகிருர் எனக் கேட்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர் சேனை அதிகாரமன்று ஒன்றினுல் விளங்கப்படுவதனைத் தெரிவு செய்வாரெனின், குற்றஞ்சாட்டப்பட்டவர் சேனை அதிகாரமன்று ஒன்றினுல் விளங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் ; அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் அவ்வாறு தெரிவு செய்யவில்லையெனின், குற்றஞ் சாட்டப்பட்டவரைச் சுருக்கமுறையில் விசாரணை செய்வதற்கு முற்படுதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(அ) (i) முனைஞர் அலுவலர் ஆனவர், பக்க முனைஞர் பதவி வரிசையின் அல்லது அதைவிட உயர்ந்த பதவி வரிசையில் உள்ளவராக இருப்பாரெனின், குற்றஞ்சாட்டப்பட்டவர் தொண்ணூறு நாட்களுக்கு விஞ்சாதவொரு காலத்துக்கு தடுப்புக் காவலின்கீழ் அல்லது மறியலில் வைக்கப்படுவதற்குக் கட்டளையிடுவதுடன், அத்தகைய கட்டளை வான்படையின் முனைஞரினுல் உறுதிப்படுத்தப்படும்வரையில் அம்மறியற்றண்டனை பயனுடையதாக வருதலும் ஆகாது.

(ii) முனைஞர் அலுவலர் ஆனவர், பக்க முனைஞர் பதவி வரிசைக்குக் குறைவானவராக இருப்பாரெனின், இருபத்தெட்டு நாட்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்குக் குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுப்புக் காவலின்கீழ் வைக்கப்படுவதற்குக் கட்டளையிடல் வேண்டும்; அல்லது".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.